**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**RLTOP – 02/2024**

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி–1 ஸ்ரீதரன் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 09.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீதரன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | மருதைப்பிள்ளை | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 40 |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் எதிர்மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**குறுக்கு விசாரணை:**

1) மனு சொத்து மனுதாரருக்கு சொந்தமானது என்றால் சரிதான். இம்மனுவை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால், என்னை மனு சொத்தில் இருந்து காலி செய்ய வேண்டும் என போட்டுள்ளார். என்ன காரணத்திற்காக காலி செய்ய சொல்கிறார் என்றால் அதுபற்றி தெரியவில்லை. எனது வழக்கறிஞரிடம் மனு சொத்தை காலி செய்ய என்ன காரணம் சொல்லியிருக்கிறார் என கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் என்னிடம் என்ன கூறினார் என்றால் மனுதாரர், மனு சொத்தை விலைக்கு வாங்கியிருப்பதால் என்னை காலி செய்ய சொல்வதாக கூறினார். நான் மனு சொத்தில் வாடகைக்குத்தான் இருக்கிறேன் என்றால் சரிதான். மனுவில், மனுதாரர் மாத வாடகை ரூ.15,000/– ம் என்றும், அதை நான் செலுத்தவில்லை என்றும் கூறியுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மனுசொத்தை எப்போது வாங்கினார் என்றால் சுமார் 2 வருடங்கள் இருக்கும்.

2) ஜீன் மாதம் 2022ல் விலைக்கு வாங்கினாரா என்றால் இருக்கலாம். இம்மனுவில் மனுதாரர் ஜீலை 2022 முதல் ரூ.15,000/- வாடகை செலுத்த வேண்டும் என கேட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் மனுதாரரிடம் தற்போதுவரை வாடகை செலுத்தியதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால், ஆவணம் என்வசம் உள்ளது. ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மனுதாரருக்கு ஜீலை 2022 முதல் எந்த வாடகையும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. போன மாதம் வரை வாடகை செலுத்தியுள்ளேன். மனுதாரரின் மனுவை 2024ம் வருடம் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் மனுதாரருக்கு எதிராக எப்போது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 2023ம் வருடம் தாக்கல் செய்தேன். வாடகை குறித்து பிரச்சினை நீதிமன்றத்திற்கு வந்த பின்னிட்டு நான் வாடகை செலுத்தியதற்கு ரசீது மனுதாரரிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை.

3) மனுதாரர் வாடகை பெற்றுக்கொண்டு ரசீது தரவில்லை என்றும், அதனால் நீதிமன்றத்தில் வாடகை செலுத்த தற்போதுவரை ஏதாவது மனுதாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மனுதாரரிடம் நான் ஒப்புக் கொண்ட வாடகையான ரூ.15,000/- ஐ ஜீலை 2022 முதல் தற்போதுவரை செலுத்தவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் என்னிடம் வாடகை கேட்கவில்லை. எனக்கு வாடகை கொடுக்க வேண்டிய பொறுப்பு உள்ளது என்றால் சரிதான். நான் மனுதாரருக்கு வாடகையை எந்த வகையில் செலுத்த வேண்டும் என கேட்டு அறிவிப்பு ஏதாவது அனுப்பினேனா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், மனுதாரர் என்னிடம் வாடகை கேட்டு நான் தர மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது கடையை ஒட்டி இடதுபுறம் குருசாமி மருத்துவமனையும், வலதுபுறம் சுதர்சனா மருத்துவமனையும் உள்ளது என்றால் சரிதான். எனது கடையில் இருந்து சுமார் 100 மீ தொலைவில் கரூர் வைஸ்யா வங்கி உள்ளதா என்றால் 200 மீட்டர் தொலைவில் உள்ளது.

4) எனது கடையில் இருந்து சுமார் 5 நிமிடத்தில் குளித்தலை பேருந்து நிலையத்திற்கு செல்லலாம் என்றால் சரிதான். எனது கடைக்கு எதிர்புறமும், பக்கவாட்டிலும், பின்பக்கமும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். எனது கடையில் இருந்து நகராட்சிக்கு சுமார் 5 நிமிடத்தில் செல்லலாம் என்றால் சரிதான். எனது கடையில் இருந்து சிவா டெக்ஸ்டைல்ஸ் கடைக்கு 2 நிமிடத்தில் செல்லலாம் என்றால் சரிதான். மேற்படி கடை ஒரு பிரபலமான வணிக வளாகம் என்றால் சரிதான். எனது கடைக்கு அருகில் ஹபீபா என்ற சூப்பர் மார்க்கெட் உள்ளது என்றால் சரிதான். என்னை மற்றொரு வழக்கில் குறுக்கு விசாரணை செய்த போது இந்த மனு சொத்தானது நகரத்தின் மையப்பகுதி மற்றும் போக்குவரத்து நிறைந்த பகுதியில் உள்ளது என கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5) எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்துக்கு மேல்புறத்தில் மனுதாரர் தங்க நகைக்கடை நடத்தி வருகிறார் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த அசல் வழக்கில் இம்மனுதாரர் என்னை கடையை காலி செய்ய சொன்னதாக கூறியுள்ளேனா என்றால் ஆமாம். மனுதாரர் நகை கடையில் சுமார் எத்தனை நபர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் அதுபற்றி தெரியவில்லை. எனது கடைக்கு மேல்மாடி முதல்தளத்தில்தான் மனுதாரர் குடும்பத்துடன் வசிக்கிறார் என்றால் சரிதான். மனுதாரர் தனது வீட்டையும், கடையையும் விரிவுபடுத்த கட்டிடம் தேவைப்படுவதாக என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். நான் அதற்கு என்ன கூறினேன் என்றால், சிறிது காலத்தில் வேறு கடை பார்த்துக்கொண்டு காலி செய்துவிடுவதாக கூறினேன். தற்போதுவரை வேறு ஏதாவது கடை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்.

6) எவ்வளவு காலத்தில் காலி செய்து கொள்வதாக கூறினேன் என்றால், குறிப்பிட்டு நான் எதுவும் கூறவில்லை. குறிப்பிட்டு ஒரு காலத்தைக் கூறினால்

அதற்குள் காலி செய்ய வேண்டும் என்றால் சரிதான். சாட்சி தன்னிச்சையாக வேறு இடம் பார்த்து தனது தொழிலை அபிவிருத்தி செய்துவிட்டு காலி செய்வதாக கூறுகிறார். அவ்வாறு காலி செய்வது எவ்வளவு காலத்தில் என்றால் குறிப்பிட்டு கூறமுடியாது. நான் வாடகையும் செலுத்தாமல், இடத்தையும் காலி செய்யாமல் மனுதாரருக்கு மன உளைச்சலையும், பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் தனது கடையை அபிவிருத்தி செய்ய நான் மனு சொத்தை காலி செய்யாமல் இடையூறாக இருக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு தனது தொழிலை அபிவிருத்தி செய்ய உரிமை உள்ளது என்றால் சரிதான்.

7) நான் அசல் வழக்கில் அளித்த சாட்சியத்தில் மனுதாரர் எனக்கு தெரியாமல் சொத்தை வாங்கியதால் வழக்கு தாக்கல் செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் மனு சொத்தில் காய்கறி மொத்த வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு சொந்த வீடா என்றால் ஆமாம். எனக்கு குடியிருக்கும் வீட்டைத் தவிர வேறு இடம் உள்ளதா என்றால் உள்ளது. நான் மனுசொத்திற்கான வாடகையை செலுத்தாத காரணத்தினாலும், மனுதாரருக்கு மனு சொத்து சொந்த தேவைக்காக தேவைப்படுவதாலும், நான் மனுசொத்தை காலி செய்ய கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**